**முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.**

2026–ம் ஆண்டு **மார்ச்** மாதம் 11–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.2–ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன்,பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**அ.வ.எண்.275/2024**

**வா.சா:–2 (கார்த்திகேயன்)**

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பில்):–**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்பிஏ படித்துள்ளேன். என்ன தொழில் செய்துவருகிறேன் என்றால் ஜெனரல் இன்சூரன்ஸ் மேலாளராக உள்ளேன். சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததா என்றால் ஆமாம். இதற்கு முன்பாக பஜாஜ் இன்சூரன்ஸ் கம்பெனியில் மேலாளராக பணிபுரிந்து வந்தேனா என்றால் ஆமாம். வாதியை எனக்கு எப்படி தெரியும், எவ்வளவு வருடம் பழக்கம் என்றால் வாதியும் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனியில் ஆலோசகராக இருந்தார். வாதியை எத்தனை வருடமாக தெரியுமென்றால் 2009 முதல் தெரியும். வாதிக்கும், பிரதிவாதிக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றும், அவர்களுக்கு இடையே எப்போது பிரச்சினை ஏற்பட்டது என்ற விவரம் தெரியாது. வாதி, பிரதிவாதிகளுக்கிடையே என்னென்ன வழக்குகள் நடைபெற்று வருகிறது என்று தெரியுமா என்றால் தெரியாது. வாதி இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இடபத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். பிரதிவாதி என்ன எதிர்வாதம் செய்துவருகிறார் என்ற விவரம் தெரியுமா என்றாலும் தெரியாது. பிரதிவாதி கடந்த 2005–ம் வருடம் முதல் ஈரோட்டில் உள்ள முகவரியில் வசித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. நான் 2009–ம் வருடம் தான் ஈரோட்டிற்கு வந்தேன். கடந்த 2010–ம் வருடம் பிரதிவாதி எங்கள் நிறுவனத்தில் புகார் அளித்ததின் பேரில் என்னை பணியிட மாற்றம் செய்தார்கள் என்றால் சரியல்ல. கோயமுத்தூரிலுள்ள நிறுவனத்திற்கு வேறு ஒரு பெரிய வேலை இருந்ததால் அதற்காக என்னை மாற்றினார்கள். வாதி, பிரதிவாதி திருமணத்திற்கு முன்பு வாதி பிரதிவாதியிடம் வேலை பார்த்துவந்த விவரம் தெரியுமா

என்றால் தெரியாது. தாவா சொத்து எவ்வளவு தொகைக்கு கிரையம் பெறப்பட்டது என்றால் தெரியாது. சாட்சி கையெழுத்து மட்டும் தான் போட்டேன். தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து காலியிடமாக கிரையம் பெற்று எந்த வருடம் வீடு கட்டப்பட்டது என்று தெரியுமா என்றால் தாவா சொத்து 2010–ம் வருடம் கிரயம் பெறப்பட்டது. வீடு எந்த வருடம் கட்டப்பட்டது என்று தெரியாது. தாவா சொத்தில் வீடு கட்டப்பட்டதிலிருந்து பிரதிவாதியின் பெற்றோர்கள் தான் தற்போது வரை குடியிருந்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியுடன் நான் நெருக்கமாக இருந்துவந்ததால் பிரதிவாதி எங்களது நிறுவனத்தில் கொடுத்த புகாரின் பேரில் தான் என்னை வேறு கிளைக்கு மாற்றினார்கள் என்றால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்தை கிரயம் பெறும் அளவிற்கு தனிப்பட்ட வருமானம் கிடையாது என்றும், பிரதிவாதிதான் வாதி பெயரில் தாவா சொத்தை கிரயம் வாங்கினார் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாதியின் பெயரில் தாவா சொத்தை கிரயம் வாங்கிய பிறகு பிரதிவாதியின் பெற்றோர்கள் தான் செலவு செய்து வீடு கட்டினார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தை யார் தயார் செய்துகொடுத்தார்கள் என்றால் வழக்கறிஞர் தான் தயார் செய்து கொடுத்தார். தாவா சொத்து கிரயம் பெறும்போது யார் யார் உடனிருந்தார்கள் என்றால் வாதி, அவரது அம்மா, நானும், குமார் என்ற ஒருவரும் இருந்தோம். மேற்படி 4 பேரை தவிர வேறு யாரும் இல்லை. நான் வாதியுடன் நெருக்கமாக பழகிவருவதால் வாதிக்காக வேண்டி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Sd/-M.Ramachandran

| Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct. |
|---|
| Sd/.M.Ramachandran,<br>Principal Subordinate Judge, Tiruchengode. |